இணைப்பு: 12

# கவிதை மனனப் போட்டி
## கீழ்ப் பிரிவு (6 - 7 வயது)
(பிறந்த திகதி: 01.07.2014 - 30.06.2016)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## என்றும் வெல்வோம்!

வாழ்வினில் தடைகள் வருவது உண்டு
தாழ்வினை அவையே தருவதும் உண்டு
சூழ்ந்திடும் பகையே தொடர்வதும் உண்டு
வீழ்ந்திட விரக்தி படர்வதும் உண்டு.

இதையெலாம் துணிவாய் எதிர்கொள வேண்டும்
விதியெனுஞ் சோர்வை விரட்டிட வேண்டும்
புதியதோர் பாதை மதியினால் கண்டு
நதியினைப் போலே நடந்திட வேண்டும்.

வெல்வதைக் குறியாய் விரைந்துளங் கொள்வார்
வல்லவர் ஆவார் வருந்தடை தகர்ப்பார்
செல்வமுஞ் சிறப்புஞ் சேர்ந்திட வாழ்வில்
நல்லதே கண்டு நலமுற வாழ்வார்!

நன்றி, வணக்கம்.